
𑌹𑌰 𑌹𑌰 𑌶𑌙𑍍𑌕𑌰 ஸ்ரீ 𑌜𑌯 𑌜𑌯 𑌶𑌙𑍍𑌕𑌰





𑌶𑍍𑌰𑍀-𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌯 𑌨𑌮𑌃

# 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍-𑌆𑌦𑍍𑌯-𑌶𑌙𑍍𑌕𑌰-𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦-𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌗𑌤-𑌮𑍂𑌲𑌾𑌮𑍍𑌨𑌾𑌯-𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞-𑌪𑍀𑌠𑌮𑍍
# 𑌶𑍍𑌰𑍀-𑌕𑌾𑌞𑍍𑌚𑍀-𑌕𑌾𑌮𑌕𑍋𑌟𑌿-𑌪𑍀𑌠𑌮𑍍
# 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁-𑌶𑍍𑌰𑍀-𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯-𑌸𑍍𑌵𑌾𑌮𑌿-𑌶𑍍𑌰𑍀𑌮𑌠-𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍



௫௧௨௮ 𑌪𑌰𑌾𑌭𑌵𑌃 / 𑌶𑌾𑌙𑍍𑌕𑌰-𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃 ௨௫௩௫
29.07.2026 – 26.09.2026, 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌯-𑌸𑍍𑌥𑌲𑌮𑍍 – 𑌓𑌰𑌿𑌕𑍍𑌕𑍈, 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍁𑌰𑌮𑍍

## ॥𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌯-விஶேஷாஃ॥

𑌵𑍇𑌦-𑌧𑌰𑍍𑌮-𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰-𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨-𑌸𑌭𑌾
9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org

## ॥சாதுர்மாஸ்ய-ஸங்கல்ப:॥

வ்யாஸ பூஜை செய்து யதிகள் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்யும் சமயத்தில் தாம் சாதுர்மாஸ்ய வ்ரதம் பூர்த்தி ஆகும் வரை அவ்விடத்திலேயே இருப்பதாகத் தெரிவித்து கீழ்கண்ட ச்லோகத்தைச் சொல்வர்–

ப்ராயேண ப்ராவ்ருஷி ப்ராணிஸங்குலம் வர்த்ம த்ருஶ்யதே।
அதஸ்தேஷாமஹிம்ஸார்த்தம் பக்ஷா வை ஶ்ருதிசோதனாத்॥
ஸ்தாஸ்யாமஶ்சதுரோ மாஸாந் அத்ரைவாஸதி பாதகே॥

அதற்கு அங்கிருக்கும் க்ருஹஸ்தர்கள் சொல்ல வேண்டிய மறுமொழி–

நிவஸந்து ஸுகேநாத்ர கமிஷ்யாம: க்ருதார்த்ததாம்।
யதாஶக்தி ச ஶுஶ்ரூஷாம் கரிஷ்யாமோ வயம் முதா॥

“ஸௌகரியமாக தாங்கள் இங்கேயே தங்குங்கள். இதனால் நாங்கள் பாக்கியவான்கள் ஆவோம். எங்களால் இயன்ற சேவையை நாங்கள் மகிழ்ச்சியுடன் செய்வோம்.”

சாதுர்மாஸ்யம் அனுஷ்டிக்க யதிக்கு கைங்கர்யம் செய்வதன் மஹிமை–

சாதுர்மாஸ்யம் யதீநாம் து ய: காரயதி பக்திமாந்।
ஸ யாதி தைஹிகைஶ்வர்யம் ஆமுஷ்மிக-ஸுகம் மஹத்॥

யாதொருவன் ஸன்யாஸிக்கு சாதுர்மாஸ்ய வ்ரதத்தை நடத்திவைக்கிறானோ அவன் இவ்வுலகத்தில் ஐஸ்வர்யத்தையும் பரலோகத்தில் சுகத்தையும் அடைந்து மேன்மையுடனிருப்பான்.

பிக்ஷாம் ஸத்க்ருத்ய யோ தத்யாத் விஷ்ணுரூபாய பிக்ஷவே।
க்ருத்ஸ்நம் வா ப்ருதிவீம் தத்யாத் தேந துல்யம் ந தத்பலம்॥

**பொருள்** – யாதொருவன் விஷ்ணு ஸ்வரூபியான ஸன்யாஸியை உபசரித்து பிக்ஷை கொடுக்கிறானோ அவன் பூமி முழுவதையும் தானம் செய்த பலனை விட அதிக புண்யத்தை அடைகிறான்.

யதிஹஸ்தெ ஜலம் த³த்³யாத் பி⁴க்ஷாம் த³த்³யாத் புநர்ஜலம்|
தத்³பை⁴க்ஷம் மேருணா துல்யம் தஜ்ஜலம் ஸாக³ரோபமம்||

**பொருள்** – ஸந்ந்யாஸியின் இலையில் அன்னமிடுவதற்கு முன்பு உத்தரணி ஜலம் கையில் விடுவதால் மேருபர்வதத்திற்கொப்பான பிக்ஷையாகும். அன்னம் வைத்த பிறகு கையில் ஜலம் விடுவது சமுத்ர ஜலத்திற்கொப்பாகும்.

❀❀❀

## பிக்ஷாவந்தனத்தின் முக்கியத்துவம்

மனிதப் பிறவியின் உண்மைப் பயனாவது அறத்தைக் கடைபிடித்து அதன் மூலம் உலகாயத பயனான பொருள் மற்றும் இன்பத்தையும் நுகர்ந்து ஆனால் இறுதியில் அதற்கும் அப்பாற்பட்ட சாசுவதமான பேரின்பத்தை அடைவதே. ஆனால் அஞ்ஞானத்தால் கட்டுண்டிருக்கும் ஜீவர்களாகிய நமக்கு இதை செயல்படுத்த சரியான வழி தெரிவதில்லை. ஆகவே நமக்கு வழிகாட்ட குரு என்ற ஒருவர் வேண்டியிருக்கிறார். தமக்கொரு பயனையும் எதிர்பாராத அவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவியலும்?

குருவிற்கோ இறைவனுக்கோ (உண்மையில் இருவரும் ஒருவரே!) நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை எனலாம். இருப்பினும்—

பத்ரம் புஷ்பம் ப²லம் தோயம் யோ மே ப⁴க்த்யா ப்ரயச்ச²தி|
தத³ஹம் ப⁴க்த்யுபஹ்ருதம் அஶ்நாமி ப்ரயதாத்மந:||

என்று பகவான் கீதையிலும், யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை என்று திருமூலரும் கூறியபடி பக்தியுடன் ஒரு சிறிய எளிய இலை, பூ, பழம், நீர் இவற்றை ஸமர்ப்பணம் செய்தால், குழந்தை அளிப்பதைக் கண்டே பெற்றோர் மகிழ்வது போல, அதைக் கண்டே அவர் மகிழ்கிறார். இதையே “தேவர்கள் உண்ணவோ பருகவோ செய்வதில்லை, (ஸமர்ப்பிக்கப்பட்ட) இதையே அம்ருதமாகக் கண்டு மகிழ்கிறார்கள்” என்று சாந்தோக்ய உபநிஷத் சொல்கிறது.

மேலும் ப்ரஹ்மசாரிகள், யதிகள் இவர்களைப் போஷிப்பது க்ருஹஸ்தனின்

தலையாய கடமை. ஆகையால் க்ருஹஸ்தனே அவர்களுக்கு ஆச்ரயம் என்று மநு ஸ்ம்ருதியில் பெருமையாகச் சொல்லப்படுகிறது. அதிலும் சிறப்பாக யதியின் பஞ்ச ப்ராணன்களே அக்னிஹோத்ரிகளின் ஐந்து அக்னிகளுக்கு ஸமம் என்று சொல்லுகிறது போதாயந ஸ்ம்ருதி. அனைத்து க்ருஹஸ்தர்களும் செய்ய வேண்டியதாகிய அக்னிஹோத்ரத்தை இன்று செய்வது மிகக்கடினமாக உள்ள நிலையில் ஒரு யதிக்கு பிக்ஷை ஸமர்ப்பிப்பதை அக்னிஹோத்ரத்திற்கு ஸமமாக இந்த ஸ்ம்ருதி காட்டுகிறது.

பரிசுத்தமான சித்தமுடையோர்களின் மனதில் ஒருவரைக் குறித்து “இவருக்கு நல்லது உண்டாகட்டும்” என்ற எண்ணம் ஏற்பட்டால் அது ஸத்யமாகும் என்பதால் மேன்மையை விரும்புபவன் அத்தகைய ஞானிகளைப் பூஜிக்க வேண்டும் என்று முண்டக உபநிஷத் சொல்லுகிறது. தன் பாக்கியத்தினால் ஒரு யதிக்கு பிக்ஷை செய்விக்கும் வாய்ப்பு இருந்தும் அதைச் செய்யாமல் இருந்தால் மற்ற ஹோமம் தானம் முதலியவை அனைத்தும் பயனில்லை என்று அத்ரி ஸ்ம்ருதி கூறுகிறது.

இஃதனைத்திலிருந்தும் யதிகளுக்கு பிக்ஷை செய்விப்பதன் முக்கியத்துவம் தெரிகிறது.

அதிலும் ஜகத்குரு பீடமானது ஆதி ஆசார்யாள் நமது க்ஷேமத்தை மட்டுமே உத்தேசித்து ஏற்படுத்தியதாகும். “ஆத்ம ஞானத்தை அடைய பூமியையே த்யாகம் செய்யலாம்” என்ற கூற்று இருக்க தமது மோக்ஷம் மட்டும் வேண்டுமாகில் நமது குருநாதர் ஒரு ஏகாந்த ஸந்ந்யாஸியாக இருந்திருக்கலாமே! அப்படியின்றி பூஜை, மடம், ஸ்தாபனம் ஆகியவற்றை அவர் ஏற்படுத்தியிருப்பதன் ஒரே காரணம் நம்மெல்லோரையும் வழிநடத்த வேண்டியிருப்பதே அன்றோ!

அத்தகைய மடம் சீராக செயல்படுவதற்கு நமது பலவித ஒத்துழைப்பும் அவசியம். உண்மையில் மடம் என்பது குருவின் வழிகாட்டுதலின் பேரில் செயல்படும் அனைத்து சிஷ்யர்களாகிய நாமும் சேர்ந்தது தான்! ஆகவே மடம் என்ற ஸ்தாபனத்தை நடத்துவதில் நாமும் பங்கு கொண்டு, குருநாதரின்

வழிகாட்டுதலின் பேரில் தர்ம ஸம்ரக்ஷணத்தில் ஈடுபட்டு, குருநாதருக்கும் நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கும் ஓர் அரிய உயர்ந்த ஸம்ப்ரதாயமே பிக்ஷாவந்தனம். குருவுக்கு பிக்ஷையை ஸமர்ப்பித்து அவருக்கு வந்தனம் செய்து அவரது ஆஜ்ஞையைப் பின்பற்றுவதே பிக்ஷாவந்தனம்.

நமது க்ருஹங்களில் சுப காரியங்கள் நடக்கும்பொழுது சந்த்ரமௌளீச்வர ஸம்பாவனை என்பதாக ஸ்ரீமடத்திற்கு த்ரவ்ய ஸமர்ப்பணம் (பணமாகவோ பொருளாகவோ) செய்யும் வழக்கம் உண்டு. ப்ரயாண வசதிகள் குறைவாக இருந்த காலத்தில் குடும்ப உபாத்யாயர் மூலம் சேர்ப்பிப்பதாக இருந்தது. இன்றோ நேராகச் சென்று தரிசனம் பெற்று குருவின் கடாக்ஷத்தைப் பெறவும் முடியுமே!

ஆகவே பிக்ஷாவந்தனம் என்ற இந்த உயர்வான ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றி நாம் அனைவரும் ச்ரேயஸ்ஸை அடைவோமாக!

❁

## சாதுர்மாஸ்யம்

(ஸ்ரீ அனந்தானந்தேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்)

சாதுர்மாஸ்யம் என்ற பதத்திற்கு நான்கு மாதங்கள் என்று பொருள். சாதுர்மாஸ்ய வ்ரதம் என்பது நான்கு மாதம் அனுஷ்டிக்கப்படவேண்டிய ஒரு வ்ரதம். இது ஆஷாடமாஸ சுக்லபக்ஷ ஏகாதசியன்று ஆரம்பித்து கார்த்திகை சுக்ல த்வாதசியன்று முடிகிறது. ஸன்யாஸிகள் ஸம்பந்தப்பட்ட வரையில் சாதுர்மாஸ்யமென்பது ஆஷாட மாதத்திய பூர்ணிமையன்று ஆரம்பமாகிறது. இந்த சாதுர்மாஸ்ய வ்ரதம் க்ருஹஸ்தர்கள், ஸந்யாசிகள் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டிய ஒரு முக்கியமான வ்ரதமாகும்.

ஹேமாத்ரி என்னும் தர்மசாஸ்திர கிரந்தத்திலும் பவிஷ்ய புராணத்திலும் இந்த நான்கு மாதங்களும் பகவான் யோக நித்திரை கொள்ளும் காலமாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு மாதங்களின் முடிவில் அவர் விழித்துக்கொள்ளுகிறார். இதனால் இந்த வ்ரதம் ஆரம்பிக்கிற தினமான ஏகாதசி சயன ஏகாதசி என்றும். இது முடிவடைகிற த்வாதசி ப்ரபோத ஏகாதசி என்றும் சொல்லப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் வரும் இந்த த்வாதசியன்று

ப்ரபோதோத்ஸவம் கொண்டாட வேண்டும்.

இந்த சாதுர்மாஸ்யத்தின் முதல் மாதம் காய்கறிகளையும், இரண்டாவது மாதம் தயிரையும், மூன்றாவது மாதம் பாலையும், நான்காவது மாதம் த்விதளங்கள் (இரண்டு பாகங்கள்) உள்ளவையான பருப்பு வகைகளையும் விலக்க வேண்டும். இது எல்லோருக்கும் பொதுவான விதி இதைத் தவிர, அந்தந்த குறிப்பிட்ட பயனைக் கோருபவர்கள் குறிப்பிட்ட பொருள்களை விடவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

ஸன்யாஸிகளுக்கு சாதுர்மாஸ்யமென்பது மிகவும் முக்யமான ஒரு காலமாகும். அந்த ஸமயத்தில் அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு விசேஷ விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. ஸன்யாசிகள் நடக்க வேண்டிய விதிகளைப் பற்றி கூறும் நாரத பரிவ்ராஜகோபநிஷத் என்பது, அவர்கள் ஒரே இடத்தில் தங்கியிராமல் எப்போதும் ஸஞ்சாரம் செய்துகொண்டேயிருக்க வேண்டுமென்று கூறுகிறது. அப்படி இல்லாமல், அவர்கள் ஒரேயிடத்தில் வெகுகாலம் தங்கும் பக்ஷத்தில், அவர்கள் அங்கிருக்கும் ஜனங்களின் லௌகிக வ்யவஹாரங்களில் ஸம்பந்தப்படும்படி நேர்ந்துவிடும்.

ஆச்வலாயனர் சொல்வது -

𑌏𑌕𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌸𑍇𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌨𑌗𑌰𑍇 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍|
𑌵𑌰𑍍𑌷𑌾𑌸𑍍𑌵𑍇𑌕𑌤𑍍𑌰 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌜𑌲𑌾𑌵𑍃𑌤𑍇||

அதாவது கிராமத்தில் ஒரு ராத்ரி வஸிக்க வேண்டும். நகரமாயின் ஐந்து ராத்ரி தங்கலாம். வர்ஷா காலத்தில் நல்ல புண்ய தீர்த்தங்களுள்ளதான ஒரேயிடத்தில் தங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

ஸன்யாஸிகள் ஊர் ஊராய் ஸஞ்சாரம் செய்து கொண்டிருதக்கிற சமயம் அவர்களுக்கு ப்ரம்மவிசாரம் செய்வதற்காவது, தொடர்ந்து தியானம் செய்வதற்காவது அவகாசம் கிடைக்காது. ஆனால் வர்ஷா காலத்தில் அவர்கள் ஒரே இடத்தில் நான்கு மாதம் தங்கவேண்டுமென்றிருக்கிறது. இதற்குத்தான் ஸன்யாஸிகளின் சாதுர்மாஸ்யம் என்று பெயர்.

வர்ஷாகாலத்தில் அவர்கள் ஊர் ஊராய் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தால், அந்தக் காலத்தில் பூமியில் உண்டாகி ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் அநேக விதமான சிறிய புழு முதலிய ஜந்துக்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக்கூடும். ஸன்யாசிகள் ஆச்ரமம் எடுத்துக்கொள்ளும் சமயத்தில்

தாங்கள் ஒரு ப்ராணிக்கும் ஒரு விதமான கெடுதலும் செய்வதில்லை என்று அபயவ்ரதம் பூண்டிருப்பதால் அவர்கள் ஒரு சிறு ஜந்துக்கும் கூட கெடுதல் உண்டாக்கக்கூடாது. ஆகையால் அவர்கள் அந்தக் காலத்தில் ஒரே இடத்தில் தங்க வேண்டும்.

அந்த ஸ்தலத்திருப்பவர்களைப் பார்த்து:

வ்ராயெண வ்ராவ்ருஷி வ்ராணிஸஜ்க்ஷூமு வதூ ஷ்ருஶ்ருதெ।
சுதஷெ்ஷாஉஹிஂஸாயூஂ வக்ஷா வெெ ஶ்ரூதிவொஉநாக ।
ஷூாஸ்ுாஉஶுதூரொ ஊாஸாநு சுவெ்சுவாஸதி ஸாயகெ॥

“இந்த வர்ஷா காலத்தில் அனேகமாய் வழிநெடுக ப்ராணிகள் ஸஞ்சரிக்கின்றன. அவைகளுக்கு ஹிம்ஸையில்லாமலிருப்பதை உத்தேசித்து ச்ருதி சொல்லுகிறபடி, உங்களுக்கு ஒரு விதமான இடைஞ்சலுமில்லாமலிருக்கும் பக்ஷத்தில் இவ்விடத்திலேயே நான்கு மாதங்கள் தங்கியிருக்கலாமென்று நினைக்கிறோம்.” என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

வக்ஷா வெெ ஊாஸாஃ என்னும் ச்ருதியை அனுஸரித்து இப்போது நான்கு மாதங்கள் என்பது நான்கு பக்ஷங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு மாதங்களும் ஸன்யாஸிகள் இதர ஸன்யாஸிகளோடும், முடிந்தால் அவரவர்களுடைய குருமுதலியவர்களுடனும் சேர்ந்து ஒரே இடத்திலிருந்து அவர்களுடைய குருக்களோடும் மற்றும் அங்குள்ள இதர ஸன்யாஸிகளோடும் சேர்ந்து ப்ரம்ம விசாரம் செய்து தங்களுடைய ஸந்தேஹங்களை நிவர்த்தித்துக்-கொள்ளலாம். மற்ற காலங்களில் அவர்கள் தனியாய்த்தான் ஸஞ்சாரம் செய்ய வேண்டும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீமத் பாகவதம் முதலாவது ஸ்கந்தம் ஐந்தாவது அத்யாயத்தில் நாரதர் வ்யாஸருக்கு தன்னைப்பற்றி கூறும் விவரங்கள் கவனிக்கத்தக்கவை.

நிரூவிதொ ஸாஞுகெ ஊவ யொஹிநாஂ
ஶூஶ்ரூஷெணெ வ்ராவ்ருஷி நிவிூவிக்ஷதா௧|
உஹ்ஷி்ஷெவாநநூஶொஉிதொ ஷிவெஜெஃ
ஸக்ருஷ்த ஹூளெ் தஉவாஷுகிஷ்விஷஃ||

ஜூாநஂ ஹுஹுதஉஂ யத தூாக்ஷாக ஹஹவதொஉிதஃ|
சுஙவொவநு ஹஉிஷ்ுஜுஃ க்ருவயா ஷீநவதுஸாஃ||

அதாவது நாரதர் தான் தன்னுடைய பூர்வ ஜன்மத்தில் வர்ஷா காலத்தில் சாதுர்மாஸ்யத்திற்காக ஓர இடத்தில் தங்கியிருந்த சில ஸந்யாஸிகளுக்கு பணிவிடை செய்து வந்ததாயும் அவர்கள் தாங்கள் சாப்பிட்ட பாக்கியை இவர் சாப்பிட அனுமதித்ததாயும், அதனால் தன்னுடைய பாபங்களெல்லாம் நசித்துப் போய்விட்டதென்றும், நான்கு மாதங்கள் கழித்து அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் போகும் போது அவர்கள் தனக்கு ப்ரம்ம வித்தையை உபதேசித்தார்களென்றும் சொல்கிறார்.

இம்மாதிரி சாதுர்மாஸ்ய காலத்தில் விசாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஸன்யாஸிகள் வ்யாஸ பூஜை என்று ஒன்று நடத்துகிறார்கள். ஆஷாட மாஸத்திய பௌர்ணமிக்கு குரு பௌர்ணமி என்று ஒரு பெயர் உண்டு. அன்றைய தினம் அத்வைத ஸம்பிரதாயத்தை அனுஸரித்த ஸந்யாஸிகளெல்லோரும் ஒரு விசேஷ பூஜை நடத்துகிறார்கள். வ்யாஸ பூஜை என்று அதைச் சொன்னாலும் அது வ்யாஸருக்கு மட்டுமல்லாது எல்லா ப்ரம்ம வித்யா ஆசார்யாளுக்கும் செய்யப்படும் பூஜையாகும்।

சிராவண மாதத்து பௌர்ணமியன்று த்விஜர்களெல்லோரும் மறுபடியும் வேதாரம்பம் செய்வதற்கு முன் (புஷ்ய பௌர்ணமியில் அவர்கள் வேதம் படிப்பதை நிறுத்திவைக்க வேண்டும்.) உபாகர்மா ஒன்று நடத்துகிறார்கள். அன்று அவர்கள் அவர்களின் வேத த்ரஷ்டர்களான ரிஷிகளுக்கு பூஜை செய்கிறார்கள். பிறகு தான் வேதாரம்பம் செய்கிறார்கள். அம்மாதிரியே சாதுர்மாஸ்யத்தில் ப்ரம்ம விசாரம் செய்வதற்கு முன் ஸன்யாஸிகள் ப்ரம்மவித்யாசார்யார்களுக்கு பூஜை செய்கிறார்கள்.

இந்த ப்ரம்ம வித்யாசார்யர்களின் பூஜையின்போது ஐந்து ஐந்து பேர்கள் ஆறு பஞ்சகங்களுக்கு பூஜை செய்யப்படுகிறது.

(1) **கிருஷ்ண பஞ்சகம்** - இதில் நடுவில் கிருஷ்ண பகவான் மற்றும் வாஸுதேவர், ஸங்கர்ஷணர், ப்ரத்யும்னர், அனிருத்தர் இவர்கள் கிருஷ்ணனுக்கு கிழக்கு, தெற்கு, மேற்கு வடக்கு திக்குகளிலும்

(2) **ஸநகாதி பஞ்சகம்** - மத்தியில் ஸனகர், இவருக்கு நான்கு திக்குகளிலும் ஸனந்தனர், ஸனத்ஸுஜாதர், ஸனாதனர் ஸனத்குமாரர் இந்நான்கு பேர்களும்

(3) **வ்யாஸ பஞ்சகம்** - நடுவில் வ்யாஸரும், இவருக்கு நான்கு திக்குகளிலும் ஸுமந்து, ஜைமினி, வைசம்பாயனர், பைலர் இவர்களும்

(4) **சங்கராசார்ய பஞ்சகம்** - மத்தியில் சங்கராசார்யாளும், அவர்களுடைய

நான்கு திக்குகளிலும் பத்மபாதாசாரியார், ஹஸ்தாமலகாசாரியார், தோடகாசாரியார், ஸுரேச்வராசாரியார் இவர்களும்

(5) **த்ரவிட பஞ்சகம்** - மத்தியில் த்ரவிடாசாரியாரும் அவருக்கு நான்கு திக்குகளிலும் கௌடபாதாசார்யாள், கோவிந்த பகவத்பாதாசார்யாள், ஸங்க்ஷேபசாரீரகாசார்யாள், விவரணாசார்யாள் இவர்களும்

(6) **குரு பஞ்சகம்** - மத்தியில் குருவும் அவருக்கு நான்கு திக்குகளிலும் பரமகுரு, பரமேஷ்டி குரு, பராபரகுரு, இதர ப்ரம்மவித்யாசாரியர்கள் இவர்களும், சுகர், நாரதர், திக்பாலகர்கள், ப்ரம்மா, ஆதிசேஷன் முதலியவர்களுக்கும் பூஜையுண்டு.

ஆசார்யாளுடைய பாஷ்ய க்ரந்தங்களைப் படிப்பதற்கு முன் சரீரத்தை மூடிக்கொண்டு சாந்தி மந்திரங்கள் சொல்லும் ஸம்பிரதாயம் தொன்று தொட்டு வருகிறது. இந்த சாந்தி மந்திரங்கள் அநேக உபநிஷத்துக்களிலிருந்து சேகரிக்கப்பட்டவை. ஒவ்வொன்றும் சாந்தி, சாந்தி, சாந்தி என்று முடிவடையும். இந்த சாந்தி மந்திரங்களை சொல்லிவிட்டு பிறகு ஆசார்யாளால் இயற்றப்பட்ட தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தைச் சொல்லி தக்ஷிணாமூர்த்தியை நமஸ்கரித்துவிட்டு பகவான் நாராயணர் முதல் தன்னுடைய குரு வரையிலுள்ள குரு பரம்பரைக்கு வந்தனம் செய்து பிறகுதான் படிக்க ஆரம்பிப்பது வழக்கம். பாடம் முடிந்ததும் இவைகளெல்லாம் மறுபடியும் திரும்ப செய்யப்படும்.

இந்த சாதுர்மாஸ்யமென்பது ஜைனர்களாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஆஷாட சுத்த சதுர்தசியன்று ஆரம்பமாகிறது. கார்த்திகை பௌர்ணமியன்று முடிகிறது. அந்த நான்கு மாதங்களும் ஜைன ஸாதுக்கள் அவர்களிருக்கும் எல்லை தாண்டிப்போகமாட்டார்கள். அவர்களுக்கு முக்யமான தினங்கள் பாத்ரபத த்வாதசியும், விநாயக சதுர்த்தியுமே. இந்த இரண்டு தினங்களும் அவர்கள் கோவிலுக்குப் போவது, உபவாஸமிருப்பது. நல்ல உபன்யாஸங்கள் கேட்பது முதலிய நல்ல காரியங்களைச் செய்வார்கள். ஏழைகளுக்கு தர்மங்கள் விசேஷமாய் செய்வார்கள். அவர்களுடைய உபவாஸம் பகல் 12 மணிக்கு ஆரம்பிக்கும். நாள் முழுவதும் தொடர்ந்திருக்கும். பகலில் கொதிக்க வைக்கப்பட்ட வென்னீர் சாப்பிடுவார்கள். இரவில் அதுவும் சாப்பிடமாட்டார்கள். வர்ஷாகாலத்தில் சிறிய ஜந்துக்களின் ஸஞ்சாரங்களிலிருக்கும் அவைகளுக்கு ஹிம்ஸை ஏற்படக்கூடாதென்பதற்காகவேதான் அவர்களும் அந்த சமயம் ஒரே இடத்தில்

தங்குவது.

அசோகருடைய ஸ்தம்பம் ஒன்றில் (5வது ஸ்தம்ப சாஸனம், 2வது பத்தி) இந்த சாதுர்மாஸ்யத்தைப் பற்றி சொல்கிறது. சாதுர்மாஸ்ய நாட்களில் மீன்களை கொல்லவோ விற்கவோ கூடாது. (4-வது பத்தி) சாதுர்மாஸ்ய பக்ஷங்களில் குதிரைகள், காளைமாடுகள் முதலியவைகளுக்கு சூடு போடக்கூடாது. இந்த சாஸனங்களிலிருந்து சாதுர்மாஸ்ய காலத்தில் வாஸ ஸ்தானமாக சில குகைகள் சன்யாசிகளுக்கென்று ஏற்படுத்தப் பட்டனவென்றும் தெரிகிறது. அதை எப்படி நடத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.


க்ருஹஸ்தர்கள், ஸன்யாசிகள் எல்லோரும் இந்த சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அனுஷ்டித்து பகவத் அனுக்ரஹத்தையடைந்து லோகத்தில் சாந்தியை பரப்புவார்களாக.

❀❀❀

**Translators:** Brahmashri Thanjavur Venkatesan (Telugu), Shri P R Kannan (English).

# ॥வ்யாஸ-பூஜா-சக்ரம்॥

யதிகள் அனுஷ்டிக்கும் பூஜையின் அமைப்பு. மற்றவர்கள் அறிந்த கொள்ள மட்டும்.





9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org